8/6/95 29

உ

# பறாளை அருள்மிகு ஈசுர விநாயகர்
## திருக்கோவில் வரலாறு



PUBLIC LIBRARY, JAFFNA

வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம்
*(அறங்காவலரும் முகாமையாளரும்)*
செயலர், அறங்காவலர் சபை
*செயலாளர்: பெரிய பரிகாரியார் சித்த வைத்தியசங்கம்*
*தவிசாளர் : சித்தா வைத்திய ஆராய்ச்சி நிலையம்*
*சிறப்பு ஆலோசகர் : சித்த வைத்திய கூட்டுறவுச் சங்கம்*

வெளியீடு : 5

அருள்மிகு ஈசுர விநாயகர் திருக்கோவில்
அறங்காவலர் சபை

1994

ரூபா 20/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்.

23-5-1995

உ

# பறாளை விநாயகர் மகிமை

## காப்பு

வெவ்வினையை வேரறுக்கும் விநாயகனே
வேட்கை தணிவித்து அருளுமையா
விண்ணும் மண்ணுக்கும் முதல்நாயகனே
கண்ணிற் பணிந்தோம் எமைகாருமையா.

29

## சிவநேயச் செல்வர்காள் !

ஈழமண்டல மணித்திருநாட்டின் வடபாகம் சரித்திரத்திற்கு முற்பட்ட காலத்திலே நாகநாடு என அழைக்கப்பட்டது. நாகரிகத்தை முதலில் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர்கள் நாகநாட்டின் தமிழர்களே. முதற்சங்க காலத்திற்கு முன்பிருந்தே நாகநாடு மணிபல்லவம் என்ற பெயரால் விளங்கியது. மணிநாகபுரம் மணிபல்லவத்தில் தலைநகராக அமைந்திருந்தது. மணிபல்லவத்தை இராசசேகர அரசபரம்பரையினரே ஆட்சி செய்து வந்தனர். பல்லவராச்சியத்தையும் மணிநாகபுரத்தையும் வடநாட்டு மூவேந்தர்கள் தாக்கியும் அழித்தும் வரலானார்கள். பத்தாம் நூற்றாண்டில் மணிபல்லவத்தைக் கைப்பற்றி சோழமண்டலத்துடன் இணைத்து மணிநாகபுரத்திற்கு சோழர்புரம் என பெயரிட்டு சோழர் ஆண்டு வந்தார்கள். ஆனால் இராசசேகர ராசாக்கள் மணிபல்லவத்தை மீட்டு மீண்டும் ஆட்சி செய்தனர். எதிர்மன்ன பரராசசேகரன் 16ஆம் நூற்றாண்டில் நல்லூரில் பேரரசனாக விளங்கியவன். இவனுக்கு பட்டத்துராணி வயிற்றில் பண்டாரமும், கதிர்காமசேகரனும், காமக்கிழத்திக்கு சங்கிலியும் பிறந்தார்கள். சங்கிலி தமக்கு அரசுரிமை கிடைக்கப் போவதில்லை என்றபடியால் சதி செய்து அரசைக் கைப்பற்ற எண்ணினான். பிறப்பைப் போலவே சிந்தனைகளும் ஏற்படுகின்றன. பண்டாரம் மர்மமாக நந்தவனத்தில் கொலை செய்யப்பட்டதால் கதிர்காமசேகரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டப்பட்டது. வன்னியில் கலகம் விளைவித்த சிற்றரசர்களை அடக்குவதற்காக கதிர்காமசேகரன் பரராசசேகரனால் அனுப்பி வைக்கப்பட்டான். தந்தையை சிறையிலிட்டு முடியும் செங்கோலும் இன்றி சங்கிலி சிம்மாசனம் ஏறினான். வெற்றியுடன் மீண்ட கதிர்காமசேகரன் சங்கிலியுடன் போருக்கு எழுந்தான். தந்தை தடுத்தார். கதிர்காமசேகரன் பழைய இராசதானியாகிய சோழியபுரத்திற்கு சென்று வீமராசன் கொல்லை என்ற நந்தவனத்தில் வாழ்ந்து வந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C

வடக்கே இராவணேசுவரனால் கட்டப்பட்ட சம்பேசுவரம் என்கிற சிவாலயம் அழிவுற்று காணப்படுகிறது. தெற்கே பொன்னாலையில் திருமால் கோவில் அமைந்துள்ளது. மேற்கே இந்திரனுக்கு சாபம் நீங்கிய திருவடிநிலை தீர்த்தச் சிறப்பாக உள்ளது. கிழக்கே சோலைகளும், களனிகளும், குளங்களும், வயல்களும் நிரம்பிய சுழிபுர நகரிலே விநாயகப் பெருமானை தன் காவற் தெய்வமாக 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பறாளை வயலில் தாபித்து வழிபாடியற்றி வரலானான். பரராசசேகரனும் சிறையிலிருந்து தப்பி முடியுடனும், செங்கோலுடன் சுழிபுரத்திற்கு வந்து கதிர்காமசேகரனுடன் தங்கலானான். பரராசசேகரன் உதவியுடன் கதிர்காமசேகரன் விநாயகருக்கு கோவிலை கட்டினான். இளவரசனும், பரராசசேகரனும் இங்கிருந்து விநாயகனை வேண்டியும் வணங்கியும் வந்தார்கள். பறாளை மூர்த்தி, தல, தீர்த்தச் சிறப்பு பெற்ற தலமாகும். தமிழரசர்களினால் ஆதியில் ஆலயம் கட்டப்பட்டதை பள்ளு தெரிவிக்கிறது, பிராமண மந்திரி நயவஞ்சகமாக பரராசசேகரனைக் கொன்றான். பின்னர் சங்கிலியால் பிராமண மந்திரி கொலை செய்யப்பட்டான். அரண்மனை சமயற்காரன் காக்கைத்தம்பியினால் காட்டிக் கொடுக்கப்பட்டு சங்கிலி போத்துக்கீசரால் இறந்தான். கதிர்காமசேகரன் பறாளை விநாயகனை பரிபாலித்து வரலானான். பின்பு தனபாலசிங்க முதலி, இராசசேகரன், தனிப்புலிசிங்கமுதலி, பரராசசிங்கன், சந்திரசேகரமானாமுதலி ஆகியோரால் சந்ததி வழியாக ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தது.

## காக்காய்ப்பிள்ளையார்

ஒல்லாந்தர் 17ஆம் நூற்றாண்டிலே சைவாலயங்களை இடித்தபோது, பறாளை விநாயகர் கோவிலையும் இடிக்க முயன்றார்கள். பிரபு வை. குலசேகரம்பிள்ளை தண்டிகையில் கோவிலுக்குச் சென்று ஒல்லாந்தரை கோவிலை இடிக்க விடாது தடுத்தார். ஒல்லாந்த தளபதியும் படையினரும் குலசேகரம்பிள்ளையை மீறி கோவிலை இடிக்க முற்பட்டனர். குலசேகரம்பிள்ளை மனமுருகி கண்ணீர் மல்க ''பிள்ளையாரே காப்பாற்ற வேண்டும்'' என்று கசிந்து வேண்டினார். அப்பொழுது ஆலய முகட்டிலிருந்து பல்லாயிரக் கணக்கான காகங்கள் தோன்றி பறந்து தளபதியினதும் வீரர்களினதும் கண்களிலும் தலையிலும் கொத்தி இரத்தம் சொரிந்தது. அவர்களால் ஒரு கல்லைத்தானும் இடிக்க முடியாது செய்து விட்டன. குலசேகரம்பிள்ளையை மந்திர சக்தி மிகுந்தவராக எண்ணி பயந்து கோவிலை இடிக்காது விட்டார்கள். தளபதிக்கும் ஏனையோருக்கும் ஏற்பட்ட காயத்திற்கு குலசேகரம்பிள்ளை சிகிச்சையளித்துக் குணமாக்கினார். தளபதி மகிழ்ந்து தண்டிகை குலசேகர முதலியார் என வியந்து பாராட்டினார். இந்த அற்புதத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் மக்கள் காக்காய்ப்பிள்ளையார், கண்கொத்தி பிள்ளை யார் என அழைக்கலானார்கள்.

## விநாயகன் சித்திரத் தேர்

கவின் கலையழகும் சித்திர சிறப்புக்களும் நிறைந்த ஈசுரவிநா யகன் தேர்த் திருப்பணியை 18ஆம் நூற்றாண்டிலே தமது செல் வத்தைக் கொண்டு தண்டிகை சத்துரு குலசேகர முதலியார் நிறை வேற்றினார். ஒல்லாந்த அரசில் முதலியாராக வேலை பார்த்த நல்லூர் மாப்பாண முதலியார் அந்நிய ஆட்சியினரால் திருப் பணிக்கு இடையூறு ஏற்படாது உதவினார். வன்னியிலிருந்து மரங்களைப் பெற்றுக்கொள்ள அங்கு கடமையாற்றிய நாகநாதர் உதவினார். இந்தியாவிலிருந்து சிற்பிகளை அழைத்துவர செல்வ நாயக முதலி உதவினார். இக்கனவான்கள் மூவருக்கும் குடும்ப வைத்தியராகவும் நண்பராகவும் பிரபு விளங்கினார். மிகுந்த கலை நயத்துடன் 1790இல் தேர் அமைக்கப்பட்டது. தேரினை நிறைவு செய்தபொழுது தேர் ஆகாயத்தில் எழும்பியதாகவும் சிற்பி உடனே சில்லில் ஒரு பகுதியை வாச்சியால் உடைத்ததும் நிலத்தில் அமர்ந்ததாகவும் வரலாறு கூறுகிறது. தேரின் வெள்ளோட்டத்தின் போது ஈசான மூலையில் சிற்பி குருவியாகப் பறந்து விட்டார். இந்திய சிற்பி வழிபட்ட இயந்திரமே சுழிபுரம் பத்திரகாளி அம் பாள் கோவிலாக பரிணமித்தது. வைத்திய திறமையினாலும், செல்வத்தினாலும் நிலப்பிரபுத்துவத்தினாலும், குடிகளாலும், சீர் வரிசைகளினாலும் ஒப்பாரு மிக்காருமின்றி விளங்கிய இராசப் பிரபு தண்டிகை சத்துரு குலசேகர முதலியார் தேர்த்திருப்பணியை நிறைவேற்றினார் என்பதை வைத்தியாச்சாரி மு. தாமோதரம் பிள்ளை 1985ஆம் ஆண்டு பறாளை விநாயகன் சித்திரத்தேர் என்ற வெளியீட்டில் தெரிவித்துள்ளார்.

### குலசேகர பிரபு வமிசம்

## தண்டிகை சுப்பிரமணியபிள்ளை

சந்திரசேகர மாமுதலிக்கு பின் மகன் கதிர்காமரினால் 18ஆம் நூற்றாண்டில் திருத்திக் கட்டப்பட்டது. அவர் மகன் தனிப்புலி சிங்கமுதலி திருப்பணிகளை நிறைவு செய்தார். 1755இல் தமது சகோதரி கணவனாகிய தண்டிகை சத்துரு குலசேகர முதலியார் மகன் சின்னத்தம்பியாரையும் முகாமையாளராக சேர்த்து கோவிலை பரிபாலித்து வந்தார். பரராசசேகரனை நயவஞ்சக மாக கொலை செய்த மந்திரி பிராமண குலத்தைச் சேர்ந்தவனா கையால் ஆலய கருமங்களுக்கு சைவக் குருமாரையே நியமிக்க வேண்டும் என்று கொள்கை மகன் கதிர்காமசேகரன் காலத்தி லிருந்தே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தமது இறுதிக் காலத் தில் தனிப்புலி சிங்க முதலி ஆலயத்தை சகோதரி மகனாகிய சுப்பிரமணிய பிள்ளையிடம் 1789இல் ஒப்படைத்தார். பசுவின்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுத்து மணி ஓசையும், அன்னக் கூட்டத்தின் ஒலியும் புல்லாங் குழலின் ஒலியும், தமிழ் இசை ஒலியும் சந்தன மரங்களின் எண் ணெயினால் ஈரந்தோய்ந்த தென்றலும், சூழ்ந்த பறாளை விநா யகன் அற்புதங்களை சொல்லால் வர்ணிக்க முடியாது. பிரபு சுப்பிரமணிய பிள்ளை உரிமைக்காரராகவும் முகாமையாளராகவும், 1823 வரை பறாளை விநாயகரை பராபரித்து வந்தார். சுப்பிர மணிய பிள்ளை மகனும், பெரிய பரிகாரியாரின் தந்தையுமான வைரமுத்து 1824இல் இருந்து அறங்காவலராகவும் முகாமையாள ராகவும் 1858 வரை திருக்கோவிலைப் பராபரித்து வந்தார்.

## பறாளை விநாயகர் பள்ளு

நல்லூர் வில்லவராய முதலியார் மகன் சின்னத்தம்பிப் புலவர் சிறந்த புலமையுள்ளவர், 18ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தவர். இவர் பறாளை விநாயகன் மேற் பக்தி மேலிட்டு அவரைப் பாட் டுடைத் தலைவராக கொண்டு பள்ளுப் பிரபந்தமாக சுழிபுர நக ரின் சிறப்பையும் வேளாண்மையின் மகிமையையும் புகழ்ந்து பாடி யவர். பரராசசேகர மன்னனின் சந்ததியினராகிய பறாளை விநா யகன் கோவில் பராபரிப்புக்காரராகவுமிருந்த பரராசசிங்கனை யும், சந்திரசேகரமானா முதலியையும், குலசேகரன் சந்ததியினரை யும் புகழ்ந்து பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால் இப்பள்ளு நூலை அச்சேற்றியவர்கள் இறுதியில் சில பாக்களை சிதைந்து போய்விட்டதாக தெரிவித்து அச்சேற்ற வில்லை. 1932ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டபொழுது பெரிய பரிகாரியார் வைரமுத்து ஆறுமுகத்தினால் 1915இல் முழு ஆலயமும் புதிதாக கட்டப்பட்டது என்று பெருமையாக குறிப்பிடப்பட்டிருந் தது. சுழிபுர யூனியன் 1956இல் பதிப்பித்த பொழுது உள்நோக் கத்துடன் அந்த உண்மையை விழுங்கி விட்டது. சுழிபுரத்தின் சிறு மையை காட்டுவதாக அமைந்துள்ளது. பிரபு பெரிய பரிகாரியா ரினதும் சந்ததியினரதும் புகழும் கீர்த்தியுமே சுழிபுரத்தின் பெருமை யாகும். அவரின் குடும்ப வரலாற்று புகழையும், ஆலய வரலாற் றையும் மறைத்தும், திரித்தும் சிலர் கூற முற்படுவது சூரியனை குடையால் மறைக்க முயல்வதற்கு ஒப்பாகும். தவம் செய்வதற்கு பதிலாக சிலர் ஆசையுட்பட்டு அவம் செய்வதால் சுத்தர் பணிந்த சுழிபுரம் எத்தரும் வாழுமிடமாக மாறியுள்ளது வேதனைக்குரியது. அறங்காவலர் சபைத் தலைவராக இருந்த தனிப்புலிசிங்க முதலி யார் வசமிருந்த பறாளை விநாயகர் பள்ளு ஏட்டுப் பிரதியில் சிதைந்து போய்விட்டதாக பிறரால் கூறப்பட்டு அச்சேற்றப்படாத பாக்கள் சிதையாமல் காணப்பட்டதை பலரும் அறிவார்கள். அவற்றிற் சில எல்லாரும் தெரிந்துகொள்ள வசதியாக இங்கு பிர சுரிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியாகும் பரராசசேகரன் தன் குலத்
துதித்து நித்தம் பாரோர் பரவி ஏற்றிடும்
நீதிமன்னர் புகழ அமரர் தொழ
நின்ற கதிர்காம சேகரக் கோனும் (1)

நீர் பொருந்திய நிறையொடு நல்
நீதி மேவிய நித்திய கல்யாணன்
சீர் பொருந்திய அமரர் தொழு தனிப்புலி
சிங்க முதலி யென்னும் வேரும். (2)

திருவுலா புயத்தினன் வீரங் கொள்
தெரியல் சேருஞ் செழுமணி மார்பன்
தரும சீலன் சுப்பிரமணிய பிள்ளைத்
தண்டிகைச் சத்துருக் குல சேகரனும் (3)

துதிக்கு எண்பது தேசமெல்லாம் புகழ்
தூயன் ஊர ரசர் நாளும்
மதிக்கும் வள்ளல் தேவர் தொழநின்ற
மாபிரபு சின்னத்தம்பியா ரெனும் பூபதியோனும் (4)

கதிக்கும் பைந்தமிழ் பாவலரைத் தினங்
காத்தவன் கலி தீர்த்தவன் இரு
நிதிக்கு பேரன்நிகர் செல்வன் காவலர்தொழ
நின்ற குலசேகர பூபதி தானும் (5)

எண்டிசையும் புகழ் மணக்கும் ஏந்தல்
எம்கலியினை ஓட்டும் எங்கள் ஆண்டே
தண்டிகை குலசேகர பூபதியென்றே சொல்லும்
திருச்சேரீழ மண்டலப் பள்ளிநானே. (6)

## அருள்மிகு ஈசுரவிநாயகர் திருக்கோவில்

*ஆம்பலும் தாமரையும் மலருகின்றதும், மா பலா வாழை கமுகு கரும்பு சோலைகள் சூழ்ந்ததும், சங்குகள் ஊர்கின்றதும், பவளக் கொடிகள் வளருகின்றதும், பயிர்கள் செழித்த களனிகள் நிறைந்ததும் ஆன சுழிபுரத்தில் மருதநிலத்தின் இந்திரனாக பிரபு ஆறுமுகனார் வாழ்ந்தார். இரதங்கள் தண்டிகை, பல்லக்கு பரிவாரங்களுடன் சகல கலைகளிலும் வல்லவனாக சிறந்து விளங்கினார். கதிர்காமசேகரனால் 1540இல் கட்டப்பட்ட சுண்ணக்கல் ஆலயம் திருத்த முடியாதவாறு மிகவும் பழுதடைந்து விட்டது. 1859இல் பெரிய பரிகாரியார் ஆலய உரிமைக்காரராகவும், முகாமையாளராகவும், பராபரிப்புக்காரராகவும் பொறுப்பேற்றார். வைரக்கல்லால் புதிதாக ஆலயம் கட்டுவதற்கு தீர்மானித்தார். 1884இல் பறாளை விநாயகர் சுண்ணக்கல் ஆலயத்தை ஆறுமுகம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிப்பித்தார். அக்காலத்தில் ஒருவர் ஆறுமுகத்திற்கு எதிராக பொய்யான வழக்கு போட்டார். நீதிமன்ற விசாரணை நடந்து கொண்டிருந்த பொழுது ஒரு வருடத்துள் அவர் இறந்து விட வழக்கு தோல்வியடைந்தது.

ஆலயம் முழுவதையும் இடித்து புதிய ஆலயத்திற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கும்போது கோவிலை தவறான வழியில் அபகரிப்பதற்காக நன்னித்தம்பி என்பவர் 1889இல் தாமே ஆலயத்தின் உரிமைக்காரரும் முகாமையாளரும் என்றும் ஆலயத்தை இடித்தமைக்காக நட்டஈடு கோரியும் ஆறுமுகத்தை முகாமையாளர் கடமைகளில் இருந்து இடை நிறுத்துமாறும் ஆலயத்தையும் முகாமையையும் தம்மிடம் ஒப்படைக்குமாறும் நீதிமன்றில் வழக்குப் போட்டார். ஆனால் நீதிமன்றம் அவ்வாறு செய்யவில்லை.. பெரிய பரிகாரியார் சமர்ப்பித்த ஆவணங்களை ஆராய்ந்த நீதிமன்றம் ஆலயம் ஆறுமுகத்திற்கு சொந்தமானது, உரிமையாளரும் முகாமையாளரும் அவரே என ஏற்று அவரை இடை நிறுத்தம் செய்யவில்லை. வழக்காளியையும் தமது நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் தம்முடன் முகாமையாளர்களில் ஒருவராக சேர்த்துக் கொள்வதாக கூறினார். வழக்காளி நிபந்தனையை ஏற்று இணங்கினார். ஆறுமுகனார் இணக்கத்தையே நீதிமன்றம் தீர்ப்பாக அறிவித்தது. வழக்காளி பிள்ளையாருக்கு துரோகம் நினைத்தபடியால் பெரிய பரிகாரியாரின் நிபந்தனையை நிறைவேற்றாமல் முகாமையாளர்களுள் ஒருவராக சேர்க்கப்படாமலே ஒரு வருடத்துள் இறந்து போனார். இவை எல்லாம் விநாயகன் திருவிளையாடல்களே. பெரியவர் 1891 டிலிருந்து தமது சொந்தப் பணத்தையும் பொருட்களையும் செலவு செய்து வைரக்கற்களால் புதிய ஆலயத்தைக் கட்டிவரலானார்.

## திருக்கோவில் பரிபாலனம்

திருக்கோவில் அறப்பணி சிறக்க ஆலயத்தை 1909இல் அறச்சொத்தாக்கி அறக்கட்டளையை ஏற்படுத்தி அறங்காவலர்களாக தம்முடன் தம்பிப்பிள்ளையையும் வைரமுத்துவையும் சேர்த்து மூவர் கொண்ட அறங்காவல் சபையையும் அமைத்தார். தமது சொந்த நிலங்களில் ஐந்தை அறக்கட்டளைக்கு நல்கினார். அறச்சொத்துக்களை பேணிப் பாதுகாக்காத திருவிலூரும் அடவி காடே. கோவிற் சொத்துக்களை சுரண்டுவது வேதனைக்குரியதாகும். தமது ஆண் சந்ததியினர் தொடர்ந்தும் தலைமுறைத் தத்துவமாக அறங்காவலர்களாகவும் முகாமையாளர்களாகவும் இருந்து ஆலயத்தைப் பரிபாலிக்க ஏற்பாடு செய்தார். 1912இல் கட்டிட வேலைகள் நடைபெற்று வருகையில் சேர் பொன் இராமநாதன் துரை தமது கண் பார்வையை மீட்டுத்தந்த பெரிய பரிகாரியாருக்கு நன்றிக் கடன் செலுத்த விரும்பி, பறாளை விநாயகனை வணங்கி ஆலயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பணியை தாமே நிறைவு செய்ய விரும்பினார். பெரியவர் அதற்கு அனுமதிக்க வில்லை. ஞாபகார்த்தமாக விக்கிரக பீடத்தையும் கோமுகைக் கல்லையும் இராமநாதனிடமிருந்து அன்பளிப்பாக பெற்று ஆலயத்தில் வைத்து கட்டினார். பிரபு ஆறுமுகம் தமது பொருட்களையும், சொந்தப் பணத்தில் ரூபா ஒன்பதினாயிரம் செலவழித்து ஆலயத் திருப்பணியை நிறைவு செய்தார். சைவக் குருமார் பூசைக் கருமங்களை நிறைவேற்ற ஏற்பாடு செய்து சைவ தமிழ் பாரம்பரியத்தைப் பேணினார்.

தேனார் மலர்ச்சோலை செழித்த சுழிபுரத்தில் சுந்தரம் சேர் பறாளைப் பதியிலே ஈசுர விநாயகருக்கு அழகிய ஆலயம் அமைந்தது. விநாயகர் திருவருளால் 1915இல் இராட்சத வருடம் வைகாசி மாதம் 22ஆந் திகதி வெள்ளிக்கிழமை இடபலக்கின சுப முகூர்த்த வேளையில் பிரபு தண்டிகை சுப்பிரமணியம் சகல கருமங்களையும் தாமே முன்னின்று நடாத்தி பறாளை ஐந்துமுகனுக்கும், ஆதீன கர்த்தா ஆறுமுகனுக்கும் குடமுழுக்கினை வெகு விமரிசையாக நிறைவேற்றி வைத்து ஆலய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றார். 1909 ஆனி மாதம் 9ஆந் திகதியிலிருந்து அறக்கட்டளைப்படி அறங்காவல் சபை ஆலயத்தை பரிபாலித்து வருகிறது, கும்பாபிசேக அறிவித்தலில் தமது சொந்தப் பொறுப்பில் வைரக்கற் திருப்பணியாக செய்யப்பட்டதை ஆதீன கர்த்தாவும் முகாமையாளருமான ஆறுமுகம் தெரிவித்துள்ளமை கவனிக்கப்பாலது.

## அறங்காவலர் சபை

பிரபுக்கள் தம்பிப்பிள்ளை, வைரமுத்து, மூத்ததம்பி, சுப்பிரமணியம் 1917 லிருந்து அறங்காவலர் சபையாக ஆலயத்தை பரிபாலித்து வந்தார்கள். இவர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் ரூபா பத்தாயிரம் செலவு செய்து சுற்றுக் கொட்டகைகளையும், சுற்றுமதிலையும், மற்றைய திருப்பணிகளையும் 1920இல் நிறைவு செய்தனர்.

தம்பிப்பிள்ளைக்கும் வைரமுத்துவுக்கும் எதிராக ஒருவர் 1917இல் நீதிமன்றில் வழக்குப் போட்டார். ஆலயத்தின் உரிமையாளர்கள் தம்பிப்பிள்ளையும் வைரமுத்துவும் என்பதை ஏற்று முகாமையாளர் நியமனம் சம்பந்தமாக 1891இல் ஆறுமுகத்தின் நிபந்தனை வழக்காளியினால் நிறைவேற்றப் படவில்லை யாதலால் இணக்கத் தீர்ப்பினை நடைமுறைப் படுத்த முடியாது என தீர்ப்பு வழங்கியது.

குலசேகரம்பிள்ளை, பூலோகசுந்தரம், அப்புத்துரை இராசா, கந்தசாமி, பாலச்சந்திரன், சுப்பிரமணியம் செல்வத்துரை, தனிப் புலிசிங்க முதலியார் 1925ஆம் ஆண்டு ஒருமித்து அறங்காவலர்க

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகவும், முகாமையாளர்களாகவும் பொறுப்பேற்றார்கள். இவர்கள் தங்கள் சொந்தப் பணத்தில் ரூபா பதினையாயிரம் செலவு செய்து மடைப்பள்ளி, களஞ்சியம், பூந்தோட்டம் முதலியவற்றை அமைத்தார்கள். பெரிய பூலோகமும், குலசேகரம்பிள்ளையும் இறந்த பின்னர் சின்னையா அறக்கட்டளையை ஏற்று அமைவாக நடப்பதாக அறங்காலர்களுடன் இணங்கி ஒத்துழைத்து முதலாம் திருவிழா உபயகாரரானார். கொடியேற்றம் முகாமை ஆலய பரிபாலனம் அறங்காவலர் சபையினாலே நிறைவேற்றப்பட்டு வருகிறது.

1981இல் அறங்காவலர்கள் தமது சொந்தப் பணத்தில் ரூபா 32 ஆயிரம் செலவு செய்து கோவிலை திருத்திக் குடமுழுக்கை தலைவர் தனிப்புலிசிங்க முதலியார் நிறைவு செய்தார். அடியார்களும் மேலதிகமாக திருப்பணிகளை நிறைவேற்ற உதவினார்கள். 1985இல் அறங்காவலர் சபை 19 அறங்காவலர்களுடன் விளங்கியதால் தலைவர், செயலாளர், பொருளாளர் போன்ற பதவிகள், யாப்பு விதிகள், நிர்வாக சபை விதிகள் உருவாக்கப்பட்டு அறங்காவலர் சபையால் ஏகமனதாக அங்கீகரிக்கப் பெற்றது. உரிமை பாராட்ட முயன்ற உபயகாரர் சின்னத்துரையின் உபயமும் சில வருடங்கள் நிறுத்தப்பட்டது. தனிப்புலிசிங்க முதலியார் தலைவராகவும் பாலசுப்பிரமணியம் செயலாளராகவும் கயிலாயநாதன் பொருளாளராகவும் 1985இல் இருந்து பணியாற்றி வரலானார்கள். ஆலய பரிபாலனம், உபயங்கள், திருப்பணி முதலிய ஆலய சம்பந்தமான சகல விடயங்களிலும் அறங்காவலர் சபையின் தீர்மானமே தீர்ப்பாகும் என்பதை 1988இல் பகிரங்கமாக அறங்காவலர் சபையால் அறிவிக்கப்பட்டது. காலத்திற்கு காலம் அறக்கட்டளைப்படி அறங்காவலர்கள் சபையினால் நியமிக்கப் பெறுகிறார்கள்.

1988ஆம் ஆண்டு ஆடிமாதம் ஒன்பதாம் திகதி அறங்காவலர்கள் சகிதம் செயலாளர் வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியத்தினால் பறாளை விநாயகனுக்கு குடமுழுக்கு நிறைவேற்றப்பட்டது.

அறக்கட்டளையில் காட்டப்படாததும் அடியார்களால் ஆலயத்திற்கு அறச்சொத்தாக்கப்பட்டதுமான மேலும் ஐந்து நிலங்கள் உண்டு. அவற்றை சிலர் மறைத்து வருகிறார்கள். தற்பொழுது 16 பேர் அறங்காவலர்களாக உள்ளனர். அவர்களே ஆலய உரிமைக்காரரும் முகாமையாளர்களுமாவர். திருப்பணிகளை நிறைவேற்ற விரும்பும் அடியார்களுக்கு உதவ அறங்காவலர் சபை எப்பொழுதும் தயாராக உள்ளது. அறங்காவல் சபை பதிவு செய்யப்பட்டுள்ளது. அறக்கட்டளைக்கு எதிராக ஆலய கருமங்களில் இடையூறு விளைவிப்பவர்களுக்கும், அறச்சொத்துக்களை சுரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர்களுக்கும் எதிராக அறங்காவல் சபை சட்ட ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## கணக்கு விபரம்

அறங்காவலர் சபை 1991, 1992, 1993ஆம் ஆண்டுகளில் சொந்தப் பணமாக ரூபா நாற்பத்திஆறாயிரம் செலவு செய்து ஆலயத்தை பராபரித்துள்ளதை பெரும் பொருளாளர் வைத்திய கலாநிதி பூ. கைலாயநாதனின் அறிக்கை தெரிவிக்கின்றது.

## எல்லாம் பிள்ளையார் அறிவார்

**சிவபுண்ணிய செல்வர்காள் !**

ஆலய வரலாறுகள் பற்றி பெயர் விலாசம் இன்றி உண்மையில்லாதனவற்றை எழுதியும் மக்கள் அதனை நிராகரித்து விட்டனர், இருந்தும் இளம் சந்ததியினரும் அறிந்து கொள்வதற்காக உண்மைகள் தெரிவிக்கப்படுகிறது. சித்திராயன் பற்றி புனை கதை கூறப்பட்டுள்ளது. கள்ளர்குல சித்திராயன் பற்றி பள்ளு முதலிய சரித்திர நூல்களில் ஒன்றும் காணப்படவில்லை. பறாளை விநாயகருக்கும் இவனுக்கும் எதுவித தொடர்புகளும் கிடையாது. பறாளை என்பது வயல் நிலம். ஈசுரன் என்றால் பரஞ்சோதி. சுழிபுரத்தில் சித்தர் என அழைக்கப்பட்ட சிற்றம்பலம் மூளாய் குடி சங்கரப்பிள்ளை மகனாவார். சித்தரின் ஒழுக்ககுறைவு காரணமாக பெற்றோரால் ஊரைவிட்டு ஓடிப்போ என்று துரத்தப்பட்டு சுழிபுரத்தில் வெறுங்காலால் நடந்து திரிந்தவர். பெரியவரின் பண்ணை உழவன் பெண்ணை கந்தர்வ மணம் முடித்து வாழ்ந்தவர். சித்தரின் சம்பந்தி சுற்றமே சிறை என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆறுமுகநாவலரின் சாதிக் கொள்கை பல பாதிப்புக்களை ஏற்படுத்தியது. சித்தர் பல வருண மாதர்களுடனும் வாழ்க்கை நடத்தி சந்ததியைப் பெருக்கினார் என எழுதியது அருவருக்கத்தக்கது. வைமன், பிறக்கன் என்பது கிறிஸ்தவரால் வழங்கப்பட்ட பட்டப் பெயராகும். புலிக்கொடியுடை சோழன் வந்து இறங்கிய துறை புலியன்துறையாகும். ஆலய வழக்கில் பெரிய பரிகாரியாருக்கு யாரும் செலவு காசு கட்டவில்லை, பங்காளியாக வரவுமில்லை என்பதை 1917இல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிலிருந்து அறிந்து கொள்ளலாம். சாட்சி போட்டவர் உறுதி நிலங்களுக்கு உரிமை கொண்டாட முனைவது சட்ட விரோதமானது.

பிரபு வைரமுத்து மாப்பிள்ளையாக வட்டுக்கோட்டைக்கு தண்டிகைகளில் ஊர்வலமாக சென்றபொழுது தடுக்க முனைந்த சிற்றரை கழுத்தில் பிடித்து வெளியே துரத்தியவர் பெரிய பரிகாரியார், டாக்டர் பூலோகசுந்தரம் மணவாளனாக தண்டிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்வலத்தில் கமலாதாட்சியை மணமுடிக்கச் சென்றபொழுது, தெய்வானைப்பிள்ளையை மணமுடிக்குமாறு கேட்டு தடுக்க முற்பட்டு தோல்வி கண்டவர்கள் கமலாதாட்சி இறந்த பின்னர் அவருக்கு பணிவிடை செய்து தெய்வானைப்பிள்ளையை இரட்டை மாட்டு வைக்கல் வண்டியில் ஏற்றிக் கொண்டுபோய் வட்டுக்கோட்டையில் விட்டதனால் தெய்வானைப்பிள்ளைக்கு நினைவு மலர் வெளியிட முடியவில்லை. ஒழுக்கமற்ற சிலரின் வம்புத்தனங்களே இன்றைய அவல நிலைக்கு காரணங்களாகும். பெரிய பரிகாரியார் தண்டிகை சத்துருக் குலசேகர முதலியின் கொள்ளுப் பாட்டனாவார். பெரிய பரிகாரியாருக்கு 26 தோம்பு நிலங்கள் இருந்தன. பலருக்கு நிலங்களை தானமாக வழங்கியவர். எளிய மக்களையும் இன்சொல்லால் அழைத்து அன்புடன் நடாத்தி மதமாற்றம் நிகழாமல் தடுத்தவர். பிரபு தம்பிப்பிள்ளை அன்னமுத்துவை அவரின் பெற்றோரினதும் அரச பிரதிநிதிகளினதும் பலத்த எதிர்ப்புக்கு மத்தியில் தமது பரிவாரங்களுடன் ஐந்து இரதங்களில் சென்று கவர்ந்து வந்தார். பிரபு ஆறுமுகம், அன்னமுத்துவிற்கு சிவதீட்சை வைப்பித்து சைவ சமயத்திற்கு மாற்றி சுழிபுரத்தில் சொக்கட்டான் பந்தலிட்டு வாசல் மணவறைகள் வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க சைவக் குருமாரினால் சைவாசாரப்படி திருமணமும், சட்டப்படி பதிவுத் திருமணமும் செய்து வைத்தார். பிரபு மூத்ததம்பி 1886லும், பிரபு சுப்பிரமணியம் 1888லும் இரு ஆண் சிங்கங்களாக தோன்றினார்கள். 1891இல் தம்பிப்பிள்ளை மூளாயில் குடியேறினார். அன்னமுத்து இறந்த பின் தம்பிப்பிள்ளை மறுமணம் செய்ய மறுத்து விட்டார். தம்பிப்பிள்ளையின் உதவியாளராக இருந்த நாகலிங்கம் தமது சகோதரி தங்கமுத்துவை சுழிபுரத்திலிருந்து வயல் வரம்பு வழியாக இரவில் நடாத்திக் கூட்டிவந்து மூளாயிலுள்ள தம்பிப்பிள்ளை வீட்டில் விட அவர் கோபித்து இரண்டாவது மனைவியாக ஏற்க மறுத்து விட்டார். அந்த நேரத்தில் தப்பிப்பிள்ளையுடனிருந்த அயலவர்களான தம்புவும் விநாயகரும் மூத்ததம்பியையும், சுப்பிரமணியத்தையும் பராமரிக்க தங்கமுத்துவை அனுமதிக்குமாறு தம்பிப்பிள்ளையிடம் வேண்டிக் கொண்டதின் பேரில் இசைந்தார். இது 1896இல் நிகழ்ந்தது. 1916 வரை மூளாயில் வாழ்ந்த காலத்தில் சைவ முறைப்படியோ அல்லது சட்டப்படியோ தம்பிப்பிள்ளை தங்கமுத்துவை திருமணம் செய்து கொள்ளவில்லை. சித்தரின் ஒழுக்க குறைவு காரணமாக மகள் தங்கமுத்துவை தம்பிப்பிள்ளைக்கு திருமணம் செய்து வைப்பதற்கோ, சேர்த்துக் கொள்வதற்கோ பெரிய பரிகாரியார் மறுத்து விட்டார். காந்தருவ மணத்தினால் தம்பிப்பிள்ளைக்கு பிள்ளைகளை பெற்றெடுத்தவர் தங்கமுத்து என்பதை உலகம் அறியும். 1915ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட யாழ்ப்பாண வைபவ கௌமுதி என்ற பிரபல வரலாற்று நூலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டிகை குலசேகரமுதலி சுழிபுரத்தின் உயர் பிரபுக்கள் குலத்தைச் சேர்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தம்பிப்பிள்ளையின் மைந்தர்களாக மூத்ததம்பியையும் சுப்பிரமணியத்தையும் மட்டுமே குறிப்பிட்டுள்ளனர். தங்கமுத்துவின் சட்டபூர்வமற்ற பிள்ளைகள் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. தங்கமுத்து மகன் குலசேகரம்பிள்ளை செட்டி வமிசத்தில் திருமணம் செய்து கொண்டவர். தளையரட்ணமுதலி சித்தன்கேணியைச் சேர்ந்தவர்.

சுழிபுரத்தை பலரும் வந்து தரிசிக்கக்கூடிய நிலையை வைத்திய தொழிலில் மிகவும் சிறந்து விளங்கிய பெரிய பரிகாரியார் ஆறுமுகம் உருவாக்கினார். சேர் பொன் இராமநாதன் துரை அவர்களே பெரிய பரிகாரியாரைச் சந்தித்து வைத்தியம் செய்விக்க சுழிபுரத்தில் கால் வைத்தார் என்றால் சுழிபுரம் செய்த தவம் என்னே சின்னப்பு, குணரத்தினம் பெரிய பரிகாரியாருக்கு பணிவிடை செய்து சீடர்களாக இருந்து வைத்தியம் கற்றார்கள். பெரிய பரிகாரியார் எதிர்ப்புக்களை முறியடித்து தமது கைங்கரியத்தை நிலைநாட்டியவர். பெரியவரின் தாயார் மூளாய் தண்டிகை கனகராசமுதலி மகள் அன்னபூரணியாவர். ஆறுமுகம் மனைவி தண்டிகை கனகராசமுதலி பேத்தி அன்னலட்சுமி ஆவர். சிறப்பு மிக்க தமிழரசர்களான பரராசசேகரன், செகராசசேகரன் வமிசத்தில் தோன்றியவர் பெரிய பரிகாரியார். சட்டரீதியாக பெரிய பரிகாரியாரின் சந்ததிக்கே பறாளை விநாயகர் ஆலயம் உரிமை ஆனது என்ற சில உண்மைகளும் அதில் காணக் கிடக்கின்றது. முகாமையாளரையோ, உபயகாரரையோ, ஊழியரையோ, துணையான சபைகளையோ நியமிக்கவும், நீக்கவும் பெரிய பரிகாரியாரும் அறங்காவல் சபையும் தத்துவ முடையது என்பதை நீதிமன்றத் தீர்ப்புக்களிலிருந்து அறியலாம். ஆறுமுகம் வைரமுத்துவும், பெரியதம்பியும் பெரிய பூலோகமும், பின் தனிப்புலிசிங்க முதலியாருடன் 1964லிலிருந்து நானும் சேர்ந்து அறங்காவலர் சபையாக ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வருவதை எல்லோரும் அறிவார்கள். கொடியேற்றம், பராமரிப்பு முகாமை இரண்டு வருடம் தம்பிப்பிள்ளை சந்ததியினரும் இரண்டு வருடம் மூத்தப்பு சந்ததியினருமாக மாறி மாறி 1917லிலிருந்து நிறைவேற்றி வருவதை பிள்ளையாரும், மக்களும் அறிவர். தொடர்ந்தும் அவ்வாறே நடைபெற்று வரும் அறங்காவலர் சபை சார்பில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

என்கடன் பணிசெய்து கிடப்பதே
தன்கடன் அடியேனையும் தாங்குதல்

**செ. மயில்வாகனம்**
தலைவர்
(அறங்காவலரும் முகாமையாளரும்)
அறங்காவலர் சபை
பறாளை ஈசுரவிநாயகர் திருக்கோவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு பறாளை ஈசுர விநாயகர் திருக்கோவில்
# அறங்காவலர் சபை (1909-6-9)

பதிவு இல. 7839 / JA / 111


1. திரு. செ. மயில்வாகனம் — தலைவர்
2. திரு. பூ. பத்மநாதன் — துணைத் தலைவர்
3. வைத்திய பேரறிஞர் க. பாலசுப்பிரமணியம் — செயலர்
4. திரு. பூ. வைத்தியநாதன் — துணைச் செயலர்
5. வைத்திய கலாநிதி பூ. கைலாயநாதன் — பெரும் பொருளாளர்
6. திரு. அ. சிவகாந்தா — பொருளாளர்
7. வைத்தியாச்சாரி பூ. நாகநாதன்
8. திரு. அ. சிவச்சந்திரன்
9. திரு. க. நடேந்திரா
10. திரு. சு. இராசசேகரம்
11. திரு. பா. சாந்திக்குமார்
12. திரு. பா. சிவானந்தா
13. திரு. பா. ஆனந்தகுமார்
14. திரு பா. இந்திரகுமார்
15. திரு. பா. உருத்திரகுமார்
16. திரு. பா. சூரியகுமார்

வெளிநாடுகளில் வசிக்கும் அறங்காவலர்கள் சார்பில் திரு. நா. இராமநாதன், திரு. ப. மனோகரன், திரு. வை. மனோரஞ்சன், திரு. வை. தனநாதன், திரு. ம. துரைரத்தினம் அங்கத்தவர்களாக பணியாற்றுகிறார்கள்,


## உசாத்துணை நூல்கள் முதலியன


1. பறாளை விநாயகர் பள்ளு 1932
2. யாழ்ப்பாண வைபவ கௌமுதி
3. இலங்கையின் நூறு தமிழ் பெரியார்கள்
4. சித்த வைத்திய பரம்பரை
5. பறாளை விநாயகர் அறக்கட்டளை
6. மயிலப்பர் ஆசாரி கட்டிட ஒப்பந்தம்
7. கட்டி ஒப்பந்த வழக்கு இல. 2642
8. குலசேகரம்
9. பறாளை விநாயகர் ஆலய வழக்குகள்
10. பறாளை ஈசுர விநாயகர் ஆலய சித்திரத்தேர்
11. விவசாய கைத்தொழிற் பொருட்காட்சி மலர்—1976
12. பிரபு பெரிய பரிகாரியார் சரித்திர ஆராய்ச்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY, JAFFNA.
CHUNDIKULI BRANCH LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org